இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி



Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 284 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 11 – வியாழக்கிழமை 25 மே 2023 – சென்னை 16 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 284 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 11 - Thursday 25 May 2023 - Chennai 16+8 Pages ₹ 5.00


## அனைத்து வசதிகளையும் அரசு செய்து கொடுக்கும்!

# தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வாரீர்!

## சிங்கப்பூர் தமிழர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

**சிங்கப்பூர், மே 25 -**

**“அனைத்து வசதிகளையும் அரசு செய்து கொடுக்கும். எனவே சிங்கப்பூர் தமிழர்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முன் வாரீர்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூரில் “வேர்களைத் தேடி” என்ற அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான திட்டத்தை தொடங்கி வைத்து, உரையாற்றினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.05.2023) சிங்கப்பூரில், சிங்கப்பூர் தமிழ்ச்சங்கங்களுடன் இணைந்து நடைபெற்ற தமிழ் கலை பண்பாட்டு நிகழ்ச்சியில், “வேர்களைத் தேடி” என்ற அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான திட்டத்தை தொடங்கி வைத்தார்.

“வேர்களைத் தேடி” என்று புலம்பெயர்ந்து வாழும் இளைஞர்களை தாய்த் தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணமும், தமிழ் கலை பண்பாடு மற்றும் கலாச்சாரத்தினை அயலகத் தமிழர்களிடையே பரிமாற்றம் செய்யும் வகையிலும், ஆண்டுதோறும் 200 இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து பண்டைய தமிழர்களின் கட்டடம்/சிற்பக்கலை, நீர் மேலாண்மை, ஆடைகள் மற்றும் ஆபரணங்கள், கலை இலக்கிய பண்பாடு, தொல்லியல் ஆய்வுகள், அறிஞர்கள் மற்றும் சான்றோர்களுடன் கலந்துரையாடல் என்ற கலாச்சார பரிமாற்ற சுற்றுலாத் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, இத்திட்டத்திற்காக சிங்கப்பூரில் தெரிவு செய்யப்பட்ட 10 இளைஞர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார்.

சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள் இணைந்து நடத்திய கலாச்சார சந்திப்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு –

சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள் சார்பில் மிகுந்த எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று மிகுந்த உணர்ச்சியோடு நாமெல்லாம் மகிழத்தக்க



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.5.2023) சிங்கப்பூரில் நடைபெற்ற சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள் இணைந்து நடத்திய கலாச்சார சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், சிங்கப்பூர் உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா. சண்முகம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சிங்கப்பூர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்.இரா. ரவீந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, சிங்கப்பூர் தமிழ்ச்சங்க பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வகையில் உரையாற்றி அமர்ந்திருக்கக் கூடிய சிங்கப்பூர் உள்துறை சட்ட அமைச்சர் மரியாதைக்குரிய கா.சண்முகம் அவர்களே,

தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களே, தமிழ்நாடு தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, அவர்களே, அரசு உயர் அலுவலர்களே, அயலர் தமிழர் நலவாரிய உறுப்பினர் ராம் அவர்களே,

துவக்கத்தில் வரவேற்புரையாற்றியிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரன் அவர்களே, சிங்கப்பூருக்கான இந்திய தூதர் பி.குமரன் அவர்களே, சிங்கை தமிழ் அமைப்புக்களைச் சார்ந்த நிர்வாகிகளே, என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய சிங்கப்பூர் தமிழ் உடன்பிறப்புக்களே,

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழைப்பற்றி சொல்லுகிறபோது அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்வார்.

உளங்கவர் ஓவியமே! உற்சாகக் காவியமே!

ஓடை நறுமலரே! ஒளியுமிழ்ப் புது நிலவே!

அன்பே! அழகே! அமுதே! உயிரே!

இன்பமே! இனிய தென்றலே! பனியே!

கனியே! பசுந்தோகை மயிலே! பழரசச் சுவையே!

மரகத மணியே! மாணிக்கச்சுடரே! மன்பதை விளக்கே!

என்றெல்லாம் தமிழை அழைக்கத் தோன்றுகிறது. இருந்தாலும் தமிழை தமிழே என்று அழைக்கக்கூடிய சுகம் வேறு எதிலும் இருக்க முடியாது. அப்படிப்பட்ட அந்த தமிழ் உணர்வோடு இந்த சிங்கப்பூரில் செயலாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய அருமை நண்பர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தமிழ் அமைப்புகளின் சார்பில் இந்த விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த விழாவிலே நானும் பங்கேற்று உங்கள் அனைவரையும் சந்தித்து உரையாற்றக்கூடிய வாய்ப்பை பெற்றிருக்கிறேன். வாய்ப்பினை வழங்கிய இந்த அமைப்புகளின் நண்பர்களுக்கும் இங்கு வந்திருக்கக்கூடிய உங்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியை, வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## உங்களை உயர்த்தும் தமிழ்நாட்டை உயர்த்த நீங்கள் அனைவரும் கை கோர்க்க வேண்டும்!

**சிங்கப்பூர் என் சிந்தனைக்கு இதமான ஊர்!**

உங்களைப் பார்க்கும் போது நான் மிகுந்த உற்சாகம் அடைகிறேன், பூரிப்படைகிறேன், புளகாங்கித உணர்வோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். கடல் கடந்து சிங்கப்பூருக்கு வந்திருப்பதாக நான் நினைக்கவில்லை. தமிழ்நாட்டுக்குள்ளே இருப்பதாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அந்தளவுக்கு சிங்கப்பூர் என்பது என் சிந்தைக்கு இதமான ஊராக அமைந்திருக்கிறது.

தமிழ்மொழியில் ஏற்பட்ட எழுத்துச் சீர்திருத்தத்தை முதன்முதலில் ஏற்றுக்கொண்டு செயற்படுத்திய நாடு சிங்கப்பூர். சிங்கப்பூரில் தமிழ் நாளிதழ்தான் முதலில் தோன்றியது! சிங்கப்பூர் நாணயத்திலும் தமிழ் இடம்பெற்றுள்ளது. இப்படி சிங்கப்பூரில் தமிழ் நீக்கமற நிறைந்திருக்க அடிப்படைக் காரணமாக இருந்த முதல் பிரதமர் லீ குவான் யூ அவர்களுக்குத் தமிழர்கள் சார்பாக நான் இந்த நேரத்தில் இந்த விழாவின் மூலமாக நன்றி செலுத்துகிறேன்.

ஒரு சிறிய தீவாக இருந்த சிங்கப்பூரை மிகக் குறுகிய காலத்தில் பொருளாதார வளர்ச்சி, தொழில் முன்னேற்றம், கட்டுமானம், கப்பல்துறை, விமானப் போக்குவரத்து முதலிய பலவற்றில் உலகமே வியக்கும் வகையில் முன்னேற்றத்துக்கு வித்திட்டவர் சிங்கப்பூரின் முதல் பிரதமர் லீ குவான் யூ அவர்கள். சிங்கப்பூரில் தமிழர் ஒருவர் இந்த நாட்டின் அதிபராக, அதாவது குடியரசுத் தலைவராக 12 ஆண்டுகள் சேவையாற்றி இருக்கிறார். அவர் காலஞ்சென்ற பெரும் மதிப்புக்குரிய எஸ்.ஆர்.நாதன் அவர்கள்.

இது உலகெல்லாம் வாழும் தமிழர்களுக்குப் பெருமைதரக்கூடிய ஒன்று. அதேபோல் சிங்கப்பூரில் தமிழும் தமிழர்களும் சிறப்பாக வாழ்வதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர் தந்தை பெரியாரின் சீடராக இருந்த தமிழவேள்’ கோ.சாரங்கபாணி அவர்கள். தமிழர்கள் முன்னேற சீர்திருத்தச் சங்கத்தைத் தொடங்கியவர் அவர்.

தமிழர் திருநாளுக்கு ஒருமுறை நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களை இங்கே வரவழைத்து லீ குவான் யூ அவர்களுடன் அமரவைத்து சொற்பொழிவு ஆற்றச் செய்தவர் அவர். தமிழர்கள் பலர் இந்நாட்டின் குடி மக்களாகத் தலைநிமிர்ந்து வாழ ‘தமிழவேள்’ கோ.சாரங்கபாணி அவர்கள்தான் காரணம் என்பதை யாரும் மறக்க முடியாது.

தமிழர் வாழாத நாடு இந்த பூமிப்பந்தில் இல்லை என்று சொல்லத் தக்க அளவுக்கு பரந்து விரிந்து வாழும் தமிழர் அனைவர்க்கும் நம்பிக்கை நட்சத்திரமாக இருப்பது திராவிட இயக்கம்தான். ‘பகுத்தறிவுப் பகலவன்’ தந்தை பெரியார் அவர்கள் இரண்டு முறை


**தொடர்ச்சி 4ஆம் பக்கம்**


---

## “சிங்கப்பூரில் முதலமைச்சர்”

ட்விட்டரில் டிரெண்டாகும் ஹேஷ்டேக்



சிங்கப்பூர், மே 25 –

ட்விட்டரில் “சிங்கப்பூரில் முதலமைச்சர்” என்ற ஹேஷ்டேக் டிரெண்டிங் ஆகி வருகிறது.

புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுப்பதற்காகவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றார். நேற்று சிங்கப்பூரில் பல்வேறு தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் தொழிலதிபர்களைச் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இந்நிலையில், சிங்கப்பூர் சென்றுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பல முன்னணி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளை சந்தித்துப் பேசி வருகிறார். சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங் மற்றும் அமைச்சர்களையும் அவர் சந்திக்க உள்ளார்.

இந்நிலையில், ட்விட்டரில் “சிங்கப்பூரில் முதலமைச்சர்” என்ற ஹேஷ்டேக் டிரெண்டிங் ஆகி வருகிறது.

---

## குடியரசுத் தலைவரை அழைக்காமல் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை பிரதமர் திறப்பதற்கு

# தி.மு.க. உள்ளிட்ட 19 எதிர்க்கட்சிகள் விழாவை புறக்கணிப்பு!

## மோடியின் எதேச்சதிகாரம் என கட்சித் தலைவர்கள் கண்டனம்!

**புதுடெல்லி, மே 25 -**

**குடியரசுத் தலைவரை அழைக்காமல் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை பிரதமர் திறப்பதற்கு, தி.மு.க. உள்ளிட்ட 19 எதிர்க் கட்சிகள் புறக்கணிப்பதோடு, ‘இது மோடியின் எதேச்சதிகாரம்’ என கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

இந்திய மக்களுடனோ அல்லது எம்.பி.க்களுடனோ கலந்தாலோசிக்காமல், புதிய நாடாளுமன்றக் கட்டிடம், கட்டப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. முதல் பெண் பழங்குடியினத்தைச் சேர்ந்த குடியரசுத் தலைவர் என கொண்டாடிக் கொண்டு, மறுபுறம் அவரை முற்றிலுமாக ஒதுக்கி வைத்துவிட்டு, புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை தானே திறந்து வைக்கும் பிரதமர் மோடியின் முடிவு, ஜனநாயகத்தின் மீதான நேரடித் தாக்குதல் என விமர்சிக்கப்பட்டுள்ளது.

குடியரசுத்தலைவர் இல்லாமல் நாடாளுமன்றம் இயங்க முடியாத நிலையில், அவர் இல்லாமலேயே புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை திறந்து வைக்கும் பிரதமர் மோடியின் முடிவு கண்ணியமற்ற செயல் என்றும், குடியரசுத்தலைவரின் உயர் பதவியை அவமதிக்கும் செயல் என்றும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி நாடாளுமன்றத்தில் இருந்து ஜனநாயகத்தின் ஆன்மா பறிக்கப்பட்டுவிட்ட நிலையில், புதிய கட்டடத்திற்கு மதிப்பில்லை என்றும், இதனால் புதிய நாடாளுமன்ற கட்டட திறப்பு விழாவை புறக்கணிப்பதாக எதிர்க்கட்சிகள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இது அரசியலமைப்புச் சட்டத்தை மீறும் செயல். பிரதமர் மோடிக்குப் பதிலாக நாடாளுமன்றத்தின் தலைவராக இருக்கும் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை திறக்க வேண்டும். அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அதில் குறிப்பிட்டுள்ளனர்.

தி.மு.க. காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் (டி.எம்.சி.), ஐக்கிய ஜனதா தளம், ஆம் ஆத்மி கட்சி (ஏ.ஏ.பி.), தேசியவாத காங்கிரஸ் கட்சி (என்.சி.பி.), சிவசேனா (உத்தவ் பாலாசாகேப் தாக்கரே), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), சமாஜ்வாதி கட்சி (எஸ்.பி.), ராஷ்ட்ரிய ஜனதா தளம் (ஆர்.ஜே.டி.), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ.), முஸ்லிம் லீக், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா (ஜே.எம்.எம்.), தேசிய மாநாடு, தி. கேரள காங்கிரஸ் (எம்.), புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி (ஆர்.எஸ்.பி.), மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் (எம்.டி.எம்.கே.), விடுதலைச் சிறுத்தைகள் கட்சி (வி.சி.கே.), மற்றும் ராஷ்ட்ரிய லோக் தளம் (ஆர்.எல்.டி.) ஆகிய கட்சிகள் விழாவை புறக்கணிப்பதாக 19 எதிர்க் கட்சித் தலைவர்கள் கூறியுள்ளனர்.

2020 டிசம்பரில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தின் அடிக்கல் நாட்டு விழாவையும் காங்கிரஸ் மற்றும் பல எதிர்க்கட்சிகள் புறக்கணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.